செ.கு.எண்'. 132

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 5.4.2012

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், செலாம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜெகதீஸ்வரன் என்பவரின் மகன் பாலசுப்பிரமணி மற்றும் திரு. திருமூர்த்தி என்பவரின் மகன் பிரபாகரன் ஆகிய இருவரும் 11.9.2007 அன்று கரூர் மாவட்டம் குளித்தலை வட்டம், திருகாம்புளியூர், அருள்மிகு செல்லாண்டி அம்மன் திருக்கோயில் அருகே காவேரி ஆற்றில் குளிக்கும் போது நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியம், மாளேகவுண்டன்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. பார்த்திபன் என்பவரின் மகன் P.கிருஷ்ணகுமார், ஏழாம் வகுப்பு படித்து வந்த நிலையில் 21.12.2011 அன்று, பள்ளிக்கு அருகில் உள்ள ஆற்றில் குளிக்க சென்ற போது நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்துகளில் அகால மரணமடைந்த பாலசுப்பிரமணி, பிரபாகரன் மற்றும் கிருஷ்ணகுமார் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், பெற்ற மகன்களை இழந்த இவர்களின் குடும்பம் மிகவும் வறிய நிலையில் வாடுவதாக என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இவர்களின் வறுமையான குடும்பச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பாலசுப்பிரமணி, பிரபாகரன் மற்றும் கிருஷ்ணகுமார் ஆகியோரின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் கருணைத் தொகையாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்